## மெட்ரோ ரயில் நேரம், கட்டணங்களை அறிய

# பஸ் நிலையத்தில் டிஜிட்டல் அறிவிப்பு பலகை

சென்னை, மார்ச் 20-
மெட்ரோ ரயில் நேரம் மற்றும் கட்டண விவரங்களை அறிய மெட்ரோ ரயில் நிலையங்கள் அருகில் உள்ள பேருந்து நிலையங்களில் டிஜிட்டல் அறிவிப்பு பலகைகள் வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சென்னையில் திருவொற்றியூர் விம்கோ நகர் வரை மெட்ரோ ரயில் திட்டம் நீட்டிக்கப்பட்ட பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது. அதன்படி, 32 ஆக இருந்த ரயில் நிலையங்கள் தற்போது 40 ஆக அதிகரித்துள்ளது. இந்தநிலையில், மெட்ரோ ரயில் சேவையை தினம் தோறும் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருகின்றனர். விழா நாட்களில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயன்படுத்துவார்கள். எனவே, பயணிகளின் வருகையை அதிகரிக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் சிறப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு அருகில் இருக்கும் பேருந்து நிறுத்தங்களில் மெட்ரோ ரயில் குறித்த விவரங்களை அறிய டிஜிட்டல் வடிவிலான அறிவிப்பு பலகைகளை வைக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. முதல் கட்டமாக கீழ்பாக்கம், எழும்பூர், சென்ட்ரல் ஆகிய ரயில் நிலையங்களில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில்வே அதிகாரி ஒருவர் கூறியதாவது:

பொதுமக்களுக்கு மெட்ரோ ரயில் குறித்த அறிவிப்புகளை தொடர்ச்சியாக வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரையில் நீட்டிப்பு வழித்தடத்தில் சேவை தொடங்கப்பட்ட பிறகு ஆர்வமுடன் மக்கள் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தி வருகின்றனர். எனவே, மெட்ரோ ரயில் நிலையங்கள் அருகே உள்ள பேருந்து நிறுத்தங்களில் டிஜிட்டல் அறிவிப்பு பலகைகளை வைக்க திட்டமிட்டது.

மெட்ரோ ரயில் நேரம், வழித்தட விவரம், பயண கட்டணம், சிறப்பு சலுகைகள் ஆகியவையும் இந்த டிஜிட்டல் பலகைகளில் காண்பிக்கப்படும். முதல் கட்டமாக கீழ்பாக்கம், எழும்பூர், சென்ட்ரல் ஆகிய நிலையங்களில் டிஜிட்டல் பலகைகளை வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மெட்ரோ நிலையங்களில் இருக்கும் டிஜிட்டல் அறிவிப்பு பலகைகள் போன்றே இந்த பலகைகள் இருக்கும். 3 நிலையங்களை தொடர்ந்து விரைவில் 40 நிலையங்களிலும் அறிவிப்பு பலகைகள் நிறுவப்படும்.

இவ்வாறு கூறினார்.